1991 ஜூலை 3] [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்வதற்கு வரும் நேரத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எழுந்து நின்று, பேரவைத் தலைவர், இருக்கையில் அமர்ந்தபின் எல்லோரும் தங்கள் இடத்தில் அமர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களை அவை முன்னவர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், ஆளுங் கட்சிக்கு அடுத்து பிரதான சட்டமன்றக் கட்சியாக இருக்கும் இந்திய தேசியக் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி.)

10–05 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

எனும் குறள் நெறி கூறி, என் அலுவலைத் தொடங்குகிறேன்.

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், ''பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்'' ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத்தாள்கள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன. பேரவையின் விதி 8, உள்விதி (2)-இன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன். அதன் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப்பெற்றவர்: பேராசிரியர் க. பொன்னுசாமி

முன்மொழிந்தவர் : மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.

வழிமொழிந்தவர் ; மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்

கிறார்கள் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பாராட்டுகள் வழங்குதல் மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழம்பெரும் பெருமையும், புகழும் கொண்ட இந்தப் பத்தாவது பேரவைக்கு, தாங்கள் இந்த அவையின் சார்பாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்தும், மாண்புமிகு துணைத் தலைவராகப் பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்தும் இந்த அவையினர் பூரிப்பும், பெருமையும் கொள்கிறார்கள் என்பதை நான் தங்களுக்கும், பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பேரவையின் சார்பாக, ஒருமனதாக, தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, மிக மிகப் பாராட்டுதற்குரிய ஒன்றாகும். தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் மனமுவந்து முன்வந்து நின்று, அவர்களுடைய பேராதரவையும், பெரு ஒத்துழைப்பையும் நல்கி, நல்லதொரு மரபு இந்த மன்றத்திலே நிலைபெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, அதற்கு நல்லாதரவு தந்திருப்பதற்காக, ஆளுங்கட்சியின் சார்பாக, அவைமுன்னவர் என்ற முறையில், எதிர்க்கட்சிகளைச் சார்ந்த அத்தனை பேர்களுக்கும் நான் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பேரவையினுடைய தலைவர் பொறுப்பை ஏற்றிருக்கிற தாங்கள், இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கான எல்லாத் தகுதிகளையும், திறமைகளையும் ஒருங்கே பெற்றிருக்கிறீர்கள் என்பதை இந்த அவையினர் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

தாங்கள் மூன்றுமுறை சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தச் சட்டமன்றத்திலே இடம் பெற்றிருக்கிறீர்கள். 1977, 1980, 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களின் மூலம், இந்தச் சபையிலே இடம் பெற்று, நற்பணிகள் பலவற்றையும் ஆற்றியிருக்கிறீர்கள். அதைப்போன்றே, 1989-ஆவது ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலே சிறப்பானதொரு வெற்றியைப் பெற்று, பாராளுமன்றத்தினுடைய கட்சித் தலைவராகவும் வீற்றிருந்து, அரும்பணிகள் பலவற்றை